Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 125

வெள்ளிக்கிழமை 31 மார்ச் 2023 | பங்குனி 17 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

**முச்சந்தி முரளி**



"இப்பவுமில்லை எப்பவுமில்லை எண்டதுதான் உண்மை பாருங்கோ"

### இனப்பிரச்சினைக்குத் தீர்வு

# இப்போது இல்லாவிடின் எப்போதும் இல்லை!

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 31

இலங்கை முன்னேற்றமடைய இதுவே இறுதிச் சந்தர்ப்பம். ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டாமல், அடுத்த தலைமுறைக்கு வளமான சமுதாயத்தை உருவாக்க ஒன்றிணைவோம் – என்று ஜனாதிபதி ரணில் அழைப்பு விடுத்துள்ளார். »11

## தீயில் எரிந்து பாலகன் பலி!

யாழ்., மார்ச் 31

தீயில் எரிந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த ஆறுமாதக் குழந்தை, சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தது. விசுவமடுப் பகுதியைச் சேர்ந்த கஜீபன் பிரசாந் என்ற குழந்தையே »12

### பொறுப்புக்கூறல் விவகாரம்;

## இலங்கை அரசாங்கத்தால் தமிழர்களுக்கு அழுத்தம்!

### ஐ.நா.வில் கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 31

காணாமலாக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துமாறு கோரி போராடும் மக்களிடம், பழையவற்றை மறந்துவிடுமாறும் பொறுப்புக்கூறலை வலி »11



## உரிமையை வழங்காவிடின் இனப்பிரச்சினைகள் தீராது

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 31

வடக்கு - கிழக்கில் அபிவிருத்திகளை மட்டும் ஏற்படுத்தினால் போதாது. மாறாக அரசியல் உரிமைகளும் வழங்கப்படவேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார »12

### பயங்கரவாதத் தடைச்சட்ட விவகாரம்;

## வரவுள்ள புதிய சட்டம் 10 மடங்கு ஆபத்தானது

கொழும்பு, மார்ச் 31

பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குப் பதிலாக கொண்டுவரப்பட்டுள்ள புதிய சட்டம், 10 மடங்கு பயங்கரமானது என்று சட்டத்துறைப் பேராசிரியரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- »11

### பாதுகாப்புப் படைகளின் பிரதானி

## சவேந்திர சில்வாவை நீக்குவதற்கு முயற்சி

கொழும்பு, மார்ச் 31

பாதுகாப்புப் படைகளின் பிரதானி சவேந்திர சில்வாவை அந்தப் பதவியில் இருந்து நீக்குவதற்கான ஆயத்தங் »12

## புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டம் ஜனாதிபதியை கட்டுப்படுத்தும்!

### நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 31

புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டம், ஜனாதிபதியையும் கட்டுப்படுத்தும். இந்தச் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதியும் சொத்து »12

## தொல்பொருள் திணைக்களத்துக்குள் போராட்டம் நுழைந்ததால் பதற்றம்!

விரிவு:- பக்.11




வெடுக்குநாறிமலை விக்கிரகங்கள் உடைப்பு

## பௌத்த ஆக்கிரமிப்புகள் குருந்தூரில் அதி உச்சம்

### நிலைமையை நேரில் பார்வையிட வேண்டும் நீதிமன்றைக் கோரியது ஆலய நிர்வாகம்

முல்லைத்தீவு, மார்ச் 31

குருந்தூரில் நீதிமன்றக் கட்டளையை மீறிய வகையில் பௌத்த ஆக்கிரமிப்புக்கள் தொடர்கின்றன. இதனால், அந்தப் பகுதியை நேரில் பார்வையிட்டு வலிதான கட்டளையொன்றை வழங்கவேண்டும் என்று நீதிமன்றத்தை ஆலய »11

## வவுனியாவில் நேற்று மக்கள் போராட்டம்!

வவுனியா, மார்ச் 31

வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவலிங்கம் அடித்துநொருக்கப்பட்டமையையும், விக்கிரகங்கள் அழிக் »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச்சட்டவரைவில் பொறுப்புத் துறப்பு; அதிகாரம் குவிப்பு

## மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் சுட்டிக்காட்டு

**கொழும்பு, மார்ச் 31**

**கடந்த கால அரசாங்கங்கள் பயன்படுத்திய விதத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் தற்போது அரசாங்கத்தால் புதிதாக முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச்சட்டவரைவு நிறைவேற்றதிகாரத்துக்கு மிதமிஞ்சிய அதிகாரங்களை வழங்குவதுடன் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பொறுப்புக்கூறலையும் உறுதி செய்கிறது என மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.**

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக பிறிதொரு சட்டத்தை அறிமுகப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் கடந்தவாரம் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு வர்த்தமானி அறிவித்தலில் வெளியிட்டது.

அதன் உள்ளடக்கம் மிகமோசமானதாகக் காணப்படுகிறது என பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டி வரும் நிலையில் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் தமது நிலைப்பாட்டை மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

இதுதொடர்பில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;-

அரசாங்கங்களால் பாதுகாப்புச்சட்டங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கும் பின்னணியில், இந்தச் சட்டவரைவு தொடர்பில் விசேடஅவதானம் செலுத்தப்படவேண்டியது அவசியமாகும்.

தற்போது வெளியிடப்பட்ட சட்டவரைவானது 2018 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படாத பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவை ஒத்ததாகக் காணப்படுகிறது.

ஆயினும் அந்தச் சட்டவரைவில் உள்ளடக்கப்பட்டிருக்காத பல்வேறு குற்றங்கள் இந்தப் புதிய சட்டவரைவில் சேர்க்கப்பட்டிருப்பதுடன், அவற்றில் சில விடயங்கள் கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரம் தொடர்பில் தீவிர கரிசனையைத் தோற்றுவித்திருக்கின்றன.

குறிப்பாக பயங்கரவாதத்தடைச்சட்டத்தின்கீழ் பாதுகாப்பு அமைச்சரிடம் காணப்பட்ட தடுப்புக்காவல் உத்தரவு வழங்கும் அதிகாரம், இந்தப் புதிய சட்டவரைவில் பிரதி பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று இதனூடாக வரையறுக்கப்பட்டுள்ள தடுப்புக்காவலில் வைப்பதற்கான காலப்பகுதி மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய நிபந்தனைகளும் கரிசனைக்குரியவையாகவே உள்ளன.

அத்தோடு இந்தச் சட்டவரைவினூடாக அமைப்புக்களுக்கு எதிராகத் தடையுத்தரவு விதிப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

புதிய சட்டவரைவில் 'பயங்கரவாதக்குற்றங்களுக்கு' வழங்கப்பட்டுள்ள வரைவிலக்கணம் மிகவும் பரந்துபட்டதாகக் காணப்படுவதுடன், அதில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள் இலங்கையின் நீண்டகால ஒடுக்குமுறை வரலாற்றை நினைவூட்டுகின்றது.

எனவே நாடு மீட்சியையும், அபிவிருத்தியையும் நோக்கிப் பயணிக்கும் தற்போதைய சூழ்நிலையில், மீறல்கள் மற்றும் தண்டனைகளிலிருந்து விடுபடுதல் போன்றவற்றை முடிவுக்குக்கொண்டு வருவதற்கும் சட்டத்தின் ஆட்சி மற்றும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கும் ஏற்றவாறான நடவடிக்கைகளே முன்னெடுக்கப்படவேண்டியது அவசியமாகும் - என்றுள்ளது. (ச-இ)

## ஒரே குடும்பத்தவர்கள் மூவர் லொறி - கார் விபத்தில் சாவு!



கொழும்பு, மார்ச் 31

லொறி - கார் விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று நபர்கள் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்துச் சம்பவம் அம்பாந்தோட்டையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை, இரவு இடம்பெற்றது.

அம்பாந்தோட்டை - கொழும்பு பிரதான வீதியில் பயணித்த லொறியும் அவ்வழியே பயணித்த காரும் நேருக்கு மோதி விபத்துக்குள்ளாகின. விபத்தில் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மற்றைய நபர் படுகாயங்களுக்குள்ளாகி அம்பாந்தோட்டை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி அவரும் உயிரிழந்தார்.

விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதியான 29 வயதுடைய இளைஞர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அதனையடுத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-14,22)

## சஜித்துக்கு ஆப்பு

# 20 எம்.பிக்கள் கட்சி தாவல்?

கொழும்பு, மார்ச் 31

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து அரசுக்கு ஆதரவளிக்கத் திட்டமிட்டுள்ளனர். இதனால் சஜித் பிரேமதாஸ எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இழக்க நேரிடும் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றக் கூட்டத்தொடர் எதிர்வரும் 4 ஆம் திகதி கூடவுள்ளது. அன்றைய தினம் அரசாங்கத்துடன் இணைவதற்கு சுமார் 20 பேர் வரையில் கட்சி தாவவுள்ளனர் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் கட்சி தாவவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தனிப்பட்ட ரீதியில் பேச்சுக்களை நடத்தி வருகிறார் எனவும் அவர்களை தம்பக்கம் தடுக்க பல ஏற்பாடுகளை செய்து வருகிறார் எனவும் கூறப்படுகிறது.

இதேவேளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி உட்பட எதிரணி பக்கம் இருந்து மொத்தம் 22 பேர்வரை அரசு பக்கம் செல்லவுள்ளனர். அதன்பின்னர் அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெறும் என அரசியல் பிரமுகர் ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார். (ச-44)

## துப்பாக்கிச் சூடு; நபர் உயிரிழப்பு!

கொழும்பு, மார்ச் 31

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த நபரொருவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று வியாழக்கிழமை தெரிவித்தது.

அஹுங்கம மிதிகம பிரதேசத்தில் உள்ள உணவகம் ஒன்றின் முன்பாக நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை கார் ஒன்றில் வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டனர்.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான உணவக உரிமையாளர் பலத்த காயமடைந்த நிலையில் மாத்தறை பொது மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பயனின்றி அவர் நேற்று அதிகாலை உயிரிழந்தார் என்று மருத்துவமனை வட்டாரம் தெரிவித்தது.

இதேவேளை கடந்த 2021 ஆம் ஆண்டில் இதே உணவக உரிமையாளரை இலக்கு வைத்து துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட போதிலும் அதில் அவரது சகோதரர் உயிரிழந்தார்.

அத்தோடு இந்தத் துப்பாக்கிச்சூடு பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த ஹரக்கட்டா என அழைக்கப்படும் நதுன் சிந்தக விக்கிரமரத்னவின் உதவியாளர்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ஒ-14,இ)

## மைத்திரி, கோத்தா கொலைச் சதி:

# பதவி நீக்கப்பட்ட நாலக மீண்டும் பணிக்கு

முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன மற்றும் கோத்தாபய ராஜபக்ஷ ஆகியோரை கொலை செய்ய சதி செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வா மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகள் இருவரைக் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டப்பட்டதாக நாமல் குமார என்பவர் தெரிவித்த தகவலின் அடிப்படையில் நாலக சில்வா 2018 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில் நாலக சில்வாவுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் இதுவரை நிரூபிக்கப்படாத பின்னணியில் அவரை மீண்டும் பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்ள கடந்தவாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி புத்தளம் பிரதிப் பொலிஸ்மா அதிபராக நாலக சில்வாவை பொலிஸ்மா அதிபர் நியமித்துள்ளார். (ச-இ)

# பயணிகள் பஸ்ஸில் வெடிகுண்டு: குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை

கொழும்பு, மார்ச் 31

பயணிகள் பேருந்தில் வெடிகுண்டு வைத்து கொலைசெய்ய முயற்சித்த குற்றச்சாட்டில் கைதான நபருக்கு கடூழிய சிறைத்தண்டனையுடன் ஆயுள் தண்டனையும் விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதில் பேருந்தில் வெடிகுண்டு வைத்து கொலை செய்ய முயற்சித்த குற்றச்சாட்டில் கைதான நாகலிங்கம் மதனசேகரன் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டதையடுத்து அவருக்கு இந்தத் தண்டனை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அதேகுற்றச்சாட்டில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்ட நீதிமன்றில் முன்னிலையாகாத வழக்கின் இரண்டாவது குற்றவாளியை கைதுசெய்வதற்கான திறந்த பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு மட்டக்குளியிலிருந்து மொரட்டுவ நோக்கிப் பயணித்த பேருந்தில் சந்தேகத்துக்கிடமாக பொதி காணப்பட்ட நிலையில் நடத்துநர் உடனடியாக பயணிகளை வெளியேற்றி அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கினார். பின்னர் பேருந்து மக்கள் நடமாட்டம் இல்லாத இடத்துக்கு மாற்றப்பட்டு மேற்கொண்ட சோதனையில் வெடிகுண்டு அடங்கிய பொதி மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாளால் காயப்படுத்தியவர்களையே வாகனத்தால் மோதிக் கொன்றேன்!

## சந்தேகநபர் வாக்குமூலம்

கிளிநொச்சி, மார்ச் 31
தன்னை வாளால் வெட்டிக் காயப்படுத்தியவர்கள் மீதே வாகனத்தால் மோதி கொலை செய்தேன் என சந்தேகநபர் வாக்குமூலம் அளித்துள்ளார்.
பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இந்திரபுரம் பகுதியில் ஏ-9 வீதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
முகமாலையைச் சேர்ந்த திருபராஜ் (வயது-28) என்பவரே விபத்தில் உயிரிழந்தார்.
இந்தநிலையில் விபத்தை ஏற்படுத்திய சந்தேகநபர் உடலில் வெட்டுக்காயங்களுடன் பளை நிலையத்தில் சரணடைந்தார்.
அவரிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், "விபத்துச் சம்பவம் இடம்பெறுவதற்கு முன்பதாக எனது வீட்டுக்கு மதுபோதையில் வந்த 3 பேர் என்னுடன் தகராறில் ஈடுபட்டு என்னை வாளால் வெட்டிக் காயப்படுத்திவிட்டுச் சென்றுள்ளனர். காயமடைந்த நான் எனது வாகனத்தைச் செலுத்தி மருத்துவமனைக்குச் சென்றுகொண்டிருந்தபோது ஏ-9 வீதியில் என்னைத் தாக்கிய மூவரும் நின்றதை அவதானித்தேன். வாகனத்தை மறிக்க முற்பட்டபோது அவர்களை மோதித்தள்ளி விட்டு நிற்காது சென்றுவிட்டேன்" என சந்தேகநபர் வாக்குமூலம் அளித்துள்ளார்.
சந்தேகநபர் வெட்டுக்காயங்களுக்கு சிகிச்சை பெற மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# யாழ்.நகரப் பகுதிகளில் புதிதாக ஒழுங்குவிதிகள்

## அடுத்தவாரம் நடைமுறை

**யாழ்ப்பாணம், மார்ச் 31**
**யாழ்.நகரப் பகுதிகளில் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்தும் முகமாக புதிய ஒழுங்குவிதிகள் எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என யாழ்.மாநகரசபை அறிவித்துள்ளது.**

அதன்படி யாழ்ப்பாணம் வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பொருள்களை உள்நகர்த்துதல் வேண்டும்.
ஆஸ்பத்திரி வீதி மரக்கறிச் சந்தைக்கு முன்பாகவுள்ள கனரக வாகனத் தரிப்பிடப் பகுதியில் குறித்தொதுக்கப்பட்ட வாகனங்கள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் நிறுத்துவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.
ஆஸ்பத்திரி வீதி, கே.கே.எஸ்.வீதி, கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதி, மின்சார நிலைய வீதி, சீ.பொன்னம்பலம் வீதி ஆகிய வீதிகளில் பயணிகளை இறக்கிய பின்னர் வாகனத் தரிப்பிடங்களில் இடவசதியற்ற மற்றும் ஏனைய வாகனங்கள் அனைத்தும் நகர அபிவிருத்தி அதிகாரசபையால் குறித்தொதுக்கப்பட்ட ஆஸ்பத்திரி வீதி வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட வேண்டும்.
கஸ்தூரியார் வீதியில் காலை 8 மணிக்கு முன்பாகவும் மாலை 6 மணிக்கு பின்பும் மாத்திரமே பொருள்களை ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் அனுமதிக்கப்படும்.
- உள்ளிட்ட ஒழுங்குகளே நடைமுறையாகவுள்ளன. இதுதொடர்பில் வர்த்தகர்கள் மற்றும் வாகன சாரதிகள் உரிய நடைமுறையைப் பின்பற்றி செயற்பட வேண்டும் எனவும் யாழ்.மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (ச)

# ஐஸ் தொழிற்சாலைக்கு தண்ணீர் எடுப்பதை எதிர்த்துப் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 31
தெல்லிப்பழை பன்னாலை பிரதேசத்தில் இருந்து, ஐஸ் தொழிற்சாலைக்கு தண்ணீர் எடுப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டமொன்று நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு முன்னெடுக்கப்பட்டது.
தொழிற்சாலைக்குத் தண்ணீர் எடுப்பதால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படும் என்றும் குடிப்பதற்கு தண்ணீர் தகுந்த நிலை அற்றுப்போகும் என்றும் தெரிவித்து குறித்த பகுதியில் ஒன்றுகூடிய மக்கள் பதாகைகளை ஏந்தியவாறு கோஷமிட்டு தமது எதிர்ப்பை வெளியிட்டனர். (ஒ-14)

# காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் 2, 213 ஆவது நாளாகப் போராட்டம்

முல்லைத்தீவு, மார்ச் 31
முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நீதிகோரி நடத்தி வரும் போராட்டத்தின் 2 ஆயிரத்து 213 ஆவது நாளான நேற்று வியாழக்கிழமை கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.
முல்லைத்தீவு காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்க அலுவலகத்துக்கு முன்னால் முல்லைத்தீவு முதன்மை வீதியில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.
போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நட்டஈடும் வேண்டாம்



மரணச் சான்றிதழும் வேண்டாம். சர்வதேச விசாரணையே தீர்வைப் பெற்றுத்தர ஒரேவழி. சர்வதேசமே பதில் கூறு, எத்தகைய அழுத்தம் பிரயோகித்தாலும் நீதி கிடைக்கும் வரை போராடுவோம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். (ச-19)

# மன்னார் மாவட்டத்தை பாலைவனமாக்காதீர்!

## தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் கவனவீர்ப்பு

மன்னார், மார்ச் 31
மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் சட்டவிரோத மணல் அகழ்வை நிறுத்த வேண்டிய அரச அதிகாரிகள் லஞ்சம் பெற்று உடந்தையாக உள்ளனர். இத்தகைய செயற்பாடுகள் உடன் நிறுத்தப்படவேண்டும் எனக் கோரி கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது. தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் இடம்பெற்றது.
போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில்;
மன்னார் மாவட்டத்தில் ஆறுகளை அண்டிய பகுதிகளில் தொடர்ச்சியாக மணல் அகழப்பட்டு ஏனைய மாவட்டங்களுக்கு கடத்தப்படுகிறது. உரிய அனுமதியின்றி காடுகள் அழிக்கப்பட்டு கிராமப் பகுதிகளில் மணல் அகழப்படுகிறது. இதனைத் தடுத்து நிறுத்தவேண்டிய



அரச அதிகாரிகள் இதுசம்பந்தமாக எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. பொலிஸாரும் இந்த சட்டவிரோத மணல் கடத்தல்காரர்களுக்கு ஆதரவு வழங்குகின்றனர் - என்றனர்.
'சட்டவாக்கத்தை பாதுகாக்க வேண்டிய பொலிஸாரே லஞ்சம் வாங்காதே', 'மன்னாரை பாலைவனமாக்கப் போகின்றீர்களா?', 'விவசாய நிலங்கள் உவர் ஆகிவிட்டன' உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.
போராட்டத்தில் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ், பேசாலை முருகன் கோவில் பிரதம குரு தர்மகுமார குருக்கள், நெப்ஸோ அமைப்பின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் பெஷற் குரூஸ், நானாட்டான் பிரதேசசபை முன்னாள் தவிசாளர், மாந்தை மேற்கு பிரதேச சபை மற்றும் நானாட்டான் பிரதேசசபை முன்னாள் உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ச-213)



# குளக்கரையில் வெடிபொருள்

யாழ்ப்பாணம், மார்ச் 31
ஊர்காவற்றுறை பருத்தி அடைப்புப் பகுதியில் வெடிபொருள் ஒன்று இனங்காணப்பட்டுள்ளது என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.
பருத்தி அடைப்பு, ஜே/50 கிராமஅலுவலர் பிரிவுக்குட்பட்ட குளக்கரைக்கு அருகில் வெடிக்காத நிலையில் வெடிபொருள் ஒன்று அவதானிக்கப்பட்டது. அதனையடுத்து இது தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. தகவலுக்கமைய குறித்த பகுதிக்கு விரைந்த ஊர்காவற்றுறைப் பொலிஸார், நீதிமன்றத்தின் அனுமதி பெற்று வெடிபொருளை மீட்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணுலகு 30 . 06 . 1932

விண்ணுலகு 01 . 03 . 2023



அமரர் சுப்பிரமணியம் இரத்தினம்

களபூமி, காரைநகர்

(ஓய்வுநிலை தபால் திணைக்கள கணக்குப் பரிசோதகர்)

என்றென்றும் எமது மனங்களில் நீங்கா இடம் பிடித்த எமது அன்புத் தந்தையே!
கண்ணை இமைகாப்பது போல் எம்மைக் காத்து வளர்த்த அன்புத் தந்தையே!
தாயிற் சிறந்ததொரு கோவிலும் இல்லை தந்தை சொல்மிக்க மந்திரமும் இல்லை
அன்பின் வடிவமே அறிவுப் பொக்கிஷமே எமது பாதுகாப்பின் அரணே
உங்கள் ஆத்மா சாந்தியடைய பாலாவோடை குறிஞ்சாக்குழி
முத்துமாரி அம்பாளை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்புடன் மகள்
திருமதி வாசுகி தவபாலன்
(076 388 9675)

(CS 43170)1/6



# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 31 . 12 . 1960

ஆண்டவன் அடியில் 31 . 03 . 2021



திதி:- திருதியை (நினைவுநாள்: 09.04.2023)

செட்டிச்சோலை அளவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு சிறப்புற இனிதே இப்பூவுலகில் வாழ்ந்து மறைந்த

அமரர் முருகதாஸ் சந்திரவதனா

அவர்களை நினைவு கூருகின்றோம்.

ஆண்டுகள் இரண்டு ஆனபோதும் - அம்மா
உங்கள் நினைவுகள் - ஆறவில்லை எம்துயர்
எத்தனை ஆண்டுகள் சென்றிடினும்
நீங்காது நிலைத்திருக்கும் உங்கள் நினைவுகள்.


ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றும் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்

குடும்பத்தினர்.

(CS/22592) AH-1


# சூரியனில் ஓட்டை பூமிக்கு ஆபத்தா?



வொஷிங்டன், மார்ச் 31

சூரியனில் பூமியைவிட 20 மடங்கு பெரிய அளவில் ஓட்டை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

சூரியனின் அமைப்பு, செயற்பாடு ஆகியவை குறித்து நாசாவின் சூரிய இயக்கவியல் ஆய்வகம் ஆய்வு செய்து வருகிறது.

இதில், சூரியனில் பூமியைவிட 20 மடங்கு பெரிய அளவிலான கருமையான பகுதி தென்படுகிறது என அதிர்ச்சி தரும் விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

இது கரோனா ஓட்டை என விஞ்ஞானிகளால் அழைக்கப்படுகிறது. பார்ப்பதற்கு சூரியனின் ஒரு பகுதி காணாமற்போனது போன்று உள்ளது. இதனால் புவிகாந்தப் புயல்கள் அல்லது சூரிய காற்று ஏற்படக்கூடும் என்று அமெரிக்காவின் என்.ஓ.ஏ.ஏ. அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் சூரியனிலிருந்து வரும் ஆற்றல் நிறைந்த துகள்களால், பூமியின் காந்தப்புலம், செயற்கை கோள்கள், கைபேசிகள் மற்றும் ஜி.பி.எஸ். போன்றவற்றுக்குப் பாதிப்பும் ஏற்படக்கூடும் என்று ஆய்வாளர்கள் அதிர்ச்சி வெளியிட்டுள்ளனர். (ச-இ)

# காதலில் தோல்வியா? மீட்டெடுக்க 'லவ் பெட்டர்'

## நியூஸிலாந்து அரசு நிதியொதுக்கீடு

வெலிங்டன், மார்ச் 31

காதலில் தோல்வியடைந்த காதலர்களை மீட்டெடுக்க 'லவ் பெட்டர்' என்ற பரப்புரையை முன்னெடுத்து அதற்காக 6.4 மில்லியன் டொலர் நிதியை நியூஸிலாந்து அரசு ஒதுக்கியுள்ளது.

இன்றைய சமூகம் எளிதில் காதல் வயப்படுவதும் ஒருசில காரணங்களால் காதல் முறிவு ஏற்படுவதும் நிகழ்கின்றது.

அத்தகைய காதல் முறிவை பலர் ஏற்கமுடியாது மனதளவில் பாதிக்கப்படுவதுடன் சிலர் உயிரை மாய்த்துக் கொள்ளவும் முனைகின்றனர். ஒருசிலர் காதல் முறிவால் வன்முறைகளிலும் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறு காதல் முறிவால் தவிப்பவர்களுக்கு ஆறுதல்கூறும் வகையிலும் வன்முறைச் சம்பவங்களை தடுக்கும் வகையில் 'லவ் பெட்டர்' என்ற பரப்புரையை நியூஸிலாந்து அரசு முன்னெடுத்துள்ளது.

அதற்காக சுமார் 32 கோடி ரூபாவை செலவிடத் திட்டமிட்டுள்ளது. நியூஸிலாந்தின் இந்த புது முயற்சிக்கு அந்த நாட்டின் கள் உட்பட உலகம் முழுவதிலும் வரவேற்பு கிடைத்துள்ளது. (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** காரிய அனுகூலமான நாள். புதிய முயற்சி சாதகமாக முடியும். தேவையான பணம் கையில் இருந்தாலும், வீண்செலவுகளால் மனம் சஞ்சலப்படும். சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம்.

**மிதுனம்:** நன்மைகள் நடைபெறும் நல்ல நாள். முடிவுகள் நல்லபடியாக அமையும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்குத் துணையிருப்பார்.

**கடகம்:** உறவுகளால் ஆதாயம் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சில பிரச்சினைகள் ஏற்படும். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும்.

**கன்னி:** உற்சாகமான நாள். முக்கியமான முடிவுகள் எதையும் இன்று எடுக்க வேண்டாம். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.. உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும்.

**துலாம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சோர்வு உண்டாகலாம். உடல் நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்புண்டு. குடும்பத்தினரின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். அலைச்சலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும்.

**மகரம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். உடல்நலனில் கவனம் தேவை. ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டு சரியாகும். வீண் மனவருத்தம் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** கருத்து வேற்றுமை நீங்கி, அந்நியோன்னியம் அதிகரிக்கும். தன்னம்பிக்கை மற்றும் தைரியத்துடன் செயற்படுவீர்கள். காரியங்களில் வெற்றி உண்டாகும்.

**மீனம்:** பொறுமையுடன் இருக்க வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். முடிவுகள் எடுப்பதில் அவசரம் வேண்டாம். பேசும்போது பொறுமை தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மத அழிப்பல்ல, இனவழிப்பே!

இலங்கைத்தீவு இன்னமும் சிக்கிச்சின்னாபின்னமாகிக் கொண்டிருப்பதற்கு இரண்டு விடயங்கள் முதன்மை யானவை. மகாவம்சம் என்கின்ற மதத்தை முன்னிறுத்திய புனைகதையும், இலங்கையின் அரசமைப்பில் பௌத்தத் துக்கு முதலிடம் என்கின்ற சரத்துமே அந்த இரண்டும். இந்த நாட்டில் பெரும்பான்மையான சிங்கள மக்கள் பௌத்தர்களாகவே இருக்கின்றனர். பௌத்த – சிங்களவ ரல்லாத ஒருவர் இந்தத் தீவின் ஆட்சியாளராக வரமுடியாது என்பது எழுதப்பட்ட விதியாகவேயுள்ளது. இந்தச் சாபக் கேட்டிலிருந்து விமோசனம் கிடைக்காத வரையில் மீட்சி என்பது எட்டாக்கனி.

அரசமைப்பில் பௌத்தத்துக்கு முதலிடம் வழங்கப்பட் டுள்ளமையும் பௌத்தத்தை ஆட்சியாளர்கள் பாதுகாப்பது தலையாயகடமையாக இருப்பதாலும் ஏனைய மதத்தவர் கள் எதிர்கொள்ளும் இன்னல்கள் ஏராளம். ஏனைய மதங் களை இல்லாதொழிப்பதிலும் ஆட்சியாளர்கள் அக்கறை காட்டுகின்றார்கள். மதத்தை முன்னுரிமைப் படுத்துவதால் எழுகின்ற பிரச்சினைகளையும் கருத்திற்கொண்டே தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழம் மதச்சார்பற்ற ஒன்றாகவே இருக்கும் என்பதைக் குறிப்பிட்டிருந்தனர். ஆனால், தமி ழர் தாயகத்தில் இப்போது முன்னெடுக்கப்பட்ட பௌத்த மயமாக்கலுக்கு எதிராக, தமிழ்த் தேசமாக அணிதிரள்வ தற்குப் பதிலாக மதத்தை முன்னிறுத்திய நகர்வுகள் மேற் கொள்ளப்படுவது ஆபத்தானது. இந்த நாட்டில் சிறுபான் மையினராக இருந்துகொண்டு பெரும்பான்மையுடன் போராடவேண்டிய நாம், மத ரீதியாக மேலும் எம்முள் பிளவுபடுவது பெரும்பான்மையினரானசிங்களதேசத்துக்கு மகிழ்ச்சியான ஒன்றே. தமிழ்த்தேசியத்தை சிதைக்க விரும் புகின்ற சிங்கள தேசமோ அல்லது ஏனைய சக்திகளோ நிச்சயமாக தமிழர்களை மதரீதியாகப் பிளவுபடுத்துவதை ஊக்குவிக்கும். இதை அறிந்தும் தெரிந்தும் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை மதத்தை பாதுகாக்கின்றோம் என்ற பெயரில் அற்பத்தனமாக நடக்கும் சிலரால் தமிழினம் மத ரீதியாக பிளவுபடும் அபாயம் ஏற்படும் என்கின்ற அச்சமே மேலோங்குகின்றது.


மதத்தைத்தாண்டி இனரீதியாகச் சிந்தித்து பௌத்தமயமாக் கலை எதிர்கொள்வதே தமிழினத்தின் இருப்புக்கு வழிவ குக்கும். உண்மையில் இப்போது தமிழர் தாயகத்தில் நடந்துகொண்டிருப்பது இந்து மதத்துக்கு எதிரான நடவ டிக்கை அல்ல, அது தமிழினத்துக்கு எதிரானதுதான். தமி ழின அழிப்புத்தான் அரங்கேறிக்கொண்டிருக்கின்றது. போரில் ஓர் இனத்தைக் கொல்வது மாத்திரம் இன அழிப்பு அல்ல. அந்த இனக்குழுமத்தின் தொன்மை, கலாசாரம், பண்பாடு, நிலம், நிலத்தொடர்ச்சி என்பவற்றை இல்லா மற் செய்வதும் இன அழிப்புத்தான். தமிழர் தேசத்தின்மீது பௌத்த – சிங்கள பேரினவாதம் தொடுத்துள்ள இந்த கத் தியின்றி இரத்தமின்றிய போரை வெற்றிகொள்வதற்கு தமிழர்களாக நாம் ஓரணியாகவேண்டும். எமக்குள் மதப் பிரிவினைகள் பேசிக்கொண்டு மதரீதியான நகர்வுகளுக்கு முன்னுரிமை கொடுக்காமல் அணிதிரண்டாகவேண்டும்.

இந்துசமயத்தைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு இப் போது கிளம்பியுள்ள சில அமைப்புக்கள் தொடர்பிலும் அவர்களது பின்னணிகள் தொடர்பிலும் அவதானம் செலுத் தவேண்டும். மதம் ஓர் உணர்வுபூர்வமான விடயம். அதை வைத்து தமிழினத்தின் இடையே பிரிவினையை ஊன்றி விட்டால் காலத்துக்கும் ஆறாதவடுவாகத் தொடரும், தமிழினம் மேலும் சிறுபான்மையாகச் சுருங்கும். உணர்வு பூர்வமான விடயத்தைக் கையாள்வதில் கவனம்தேவை. குருந்தூர்மலையில் நீதிமன்ற உத்தரவை மீறி விகாரை கட்டப்பட்ட விடயமாக இருக்கலாம், கச்சதீவில் புத்தர் சிலை வைக்கப்பட்ட விவகாரமாக இருக்கலாம், வெடுக்கு நாறி ஆலயத்தில் சிவலிங்கம் உடைக்கப்பட்டதாக இருக் கலாம். இவை எல்லாவற்றையும் ஒரே தராசில் நிறுத்தி தமிழின அழிப்புக்கு எதிரானதாக அதை முன்னிறுத்திப் போராடுவதே, தமிழினம் தனது இருப்பை நிலை நிறுத்துவதற்கு உதவும்.

நாளொரு நல்வார்த்தை

"பேசுபவனைக் கவனிக்காதே. பேச்சைக் கவனி. பேச்சின் நீளம் அதன் மதிப்பைக் குறைத்துவிடும்"

– ஹசரத் அலி




### இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த

# பலாலி இராஜேஸ்வரி அம்மன் ஆலய விக்கிரகங்களும் மாயம்

**யாழ்ப்பாணம், மார்ச் 31**

**வடக்கின் மிகப்பெரும் இராணுவத் தளமாக விளங்குகின்ற பலாலி இரா ணுவ உயர்பாதுகாப்புக் கட்டுப்பாட்டில் இருந்த பழமை வாய்ந்த இராஜரா ஜேஸ்வரி அம்மன் ஆலயத்தின் விக்கிரகங்கள் இரண்டு களவாடப்பட்டுள் ளன என ஆலய நிர்வாகத்தினரால் பலாலி பொலிஸ்நிலையத்தில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.**

இதுதொடர்பில் ஆலய பரி பாலனசபைத் தலைவர் குறிப்பிடுகையில்;

1990 ஆம் ஆண்டு போர்ச் சூழல் காரணமாக யாழ்ப்பா ணத்திலிருந்து பல பகுதிக ளுக்கு மக்கள் இடம்பெயர்ந் தபோதும் 2002 ஆம் ஆண்டு இந்து கலாசார அமைச்சரால் ஆலயத்துக்கு சென்றுவரக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டது. கடந்த ஆண்டுவரை ஆலயமும் விக்கிரகங்களும் நல்ல முறையில் காணப்பட்ட நிலை யில் கடந்த ஆண்டு டிசெம் பர் திருவெம்பாவை தினத் தன்று முருகன் சிலை காணா மற் போயிருந்தது. தற்போது முருகன் விக்கிரகம் காணா மற் போயுள்ளது.

பலாலி உயர்பாதுகாப்பு வல யத்தில் காணப்பட்ட ஆலயத் தின் விக்கிரகங்கள் இராணு வத்தினருக்குத் தெரியாது எவ்வாறு காணாமற் போயுள் ளது? நாம் பூசை வழிபாடுக ளுக்குச் செல்வதற்குகூட இராணுவத்தின் அனும தியை பெற்றுச் செல்லும் நிலைமையில் எவ்வாறு விக்கிரகங்கள் காணாமற் போயுள்ளன? இதற்கு பொறுப்புக்கூறவேண்டும். அண்மைக்காலமாக நிகழ்ந் தேறும் இனஒடுக்குமுறை யின் பௌத்த மயமாக்க லின் அங்கமாக ஆதிலிங் கேஸ்வரர் ஆலய விக்கிர கங்கள் உடைத்தெறியப்பட் டமை, கச்சதீவில் பௌத்த ஆதிக்கம் உள்ளிட்டவற்றின் தொடர்ச்சியாகவே பலாலி இராஜேஸ்வரி அம்மன் ஆலய விக்கிரகங்கள் சூறை யாடப்பட்டுள்ளமையும் தென்படுகிறது - என்றார்.

(ச-20)

# இலங்கையில் உயரும் மனிதஉரிமை மீறல்கள்

## மன்னிப்புச்சபைக்கு சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 31

இலங்கையில் பொதுமக்கள் மீது மோச மான மனித உரிமை மீறல்கள் அதிகளவில் பதிவாகின்றன என சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசியப் பிராந்திய பிரதிநிதி களிடம் தேசிய மக்கள் சக்தியினர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

சர்வதேச மன்னிப்புச்சபையின் தெற்காசிய பிராந்தியத்தின் பணிப்பாளர் யாமினி மிஷா உள்ளிட்ட குழுவினரை தேசிய மக்கள் சக்தி யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க நேற்று ஜே.வி.பி. தலைமை அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது இலங்கையில் பொதுமக்கள் மீதான மோசமான மனித உரிமை மீறல்கள் குறித்து விளக்கமளித்தார்.

முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், நீதிமன்றத் தீர்ப்புகளை அலட்சியம் செய்தல், போராட்டங்களுக்கு எதிராக தடை செய்யப்பட்ட இரசாயனங்கள் அடங்கிய கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மற்றும் அர சாங்கத்தின் மனிதஉரிமை மீறல்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

இலங்கையின் மனிதஉரிமை மீறல்கள் குறித்து சர்வதேச மன்னிப்புச்சபையின் பிர திநிதிகளால் கவனம் செலுத்தப்பட்டது. (ச-இ)

**நாளை**

01.04.2023

**சனிக்கிழமை**

**பங்குனி 18**

சுபநேரம் : 03.11 - 04.41

ராகுகாலம் : 09.11 - 10.41

**ஏகாதசி விரதம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்திடம் எல்லாவற்றுக்கும் கையேந்திக்கொண்டிருக்கக்கூடாது

## மாவட்டச் செயலர் அறிவுரை

**யாழ்ப்பாணம், மார்ச் 31**

**நாம் எல்லாவற்றுக்கும் அரசாங்கத்தின் கையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது. எங்களிடத்தில் என்னென்ன வளங்கள் இருக்கின்றனவோ அந்த வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தி எம் அத்தியாவசிய தேவையை நாமே பூர்த்தி செய்யவேண்டும்.**

இவ்வாறு பொருளாதாரம் நலிவுற்ற மக்களுக்கு இலவச அரிசிப் பொதி வழங்கும் மாவட்ட மட்ட நிகழ்வில் உரையாற்றுகையில் யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அரசாங்கத்தால் பொருளாதாரம் நலிவுற்ற குடும்பங்களுக்கு 10 கிலோ வீதம் இரண்டு மாதங்களுக்கு தற்காலிகமாக இலவச அரிசி விநியோகிக்கப்படுகிறது.

இந்த நிவாரணம் ஜனாதிபதியின் யோசனைக்கமைய இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

அரசாங்கம் அந்தந்த மாவட்டங்களில் விளைந்துள்ள நெல்லை 100 ரூபாவுக்குக் கொள்வனவு செய்து பொருளாதாரம் நலிவுற்ற மக்களுக்கு அரிசியாக மாற்றி விநியோகித்து வருகின்றது. விலைவாசி உயர்வு, உரப்பிரச்சினை, காலநிலை சீரின்மை உள்ளிட்ட பாதகமான சூழ்நிலையில் இந்தச் செயற்றிட்டம் சிறப்புதானதொன்றாகும்.

இந்தத் திட்டத்தினூடாக இரண்டு விதமான நன்மைகள் கிடைக்கப்பெறுகின்றன. நெல்லுக்குப் போதிய விலையை பெற்றுக் கொள்ளும் அதேவேளை பொருளாதாரம் நலிவுற்ற குடும்பங்களுக்கும் நன்மையேற்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் சுமார் 45 ஆயிரம் ஹெக்ரேயர் வயல்நிலம் உள்ள போதும் எங்களுக்கு 300 ஹெக்ரேயரின் நெல்லைக் கொள்வனவு செய்ய எதிர்பார்க்கப்பட்ட நிலையில் 25 ஹெக்ரேயரில் கூட நெல்லைக் கூடக் கொள்வனவு செய்யமுடியாதுபோயுள்ளது.

நாங்கள் ஏனைய மாவட்டங்களிலிருந்து நெல்லைக் கொள்வனவு செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். அதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து அரிசி கிடைக்கப்பெற்றிருக்கிறது.

இதன் மிகுதித்தொகை வவுனியா மாவட்டத்திலிருந்து கிடைக்கவுள்ளது.

தொடர்ச்சியாக இவ்வாறான உதவிகளை வழங்கித்தான் நாங்கள் வாழவேண்டும் என்கின்ற நிலை இருக்கக்கூடாது.

அரசாங்கம் அதைத் தரவில்லை, இதைத் தரவில்லை என்ற குற்றச்சாட்டுகளை மட்டும் வாசகமாக வைத்திருப்பதை தவிர்த்து அரசாங்கத்தினுடைய உதவிகளோடு நாமும் முயற்சி செய்யவேண்டும் அதன் மூலம் இந்தப் பொருளாதார நெருக்கடியிலிருந்து ஓரளவு விடுபட முடியும் - என்றார். (ச-125)



# கல்வி இராஜாங்க அமைச்சர் வவு. பாடசாலைக்குப் பயணம்

வவுனியா, மார்ச் 31

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்துக்கு கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் திடீர் பயணமொன்றை நேற்றுமுன்தினம் புதன்கிழமை முன்னெடுத்திருந்தார்.

இதன்போது பாடசாலை மாணவர்கள் விளையாட்டுப் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளையில் பாடசாலை வளாகத்தை சுற்றிப் பார்வையிட்டார்.

தொடர்ந்து பாடசாலையின் தேவைகள் தொடர்பாக அதிபர் ஆ.லோகேஸ்வரன் மற்றும் பிரதி அதிபர்கள், மாணவர்கள் ஆகியோருடன் கலந்துரையாடியதுடன், அதிபரிடமிருந்து பாடசாலையின் தேவைகள் பற்றிய மனுவொன்றையும் பெற்றுக்கொண்டார். (ஒ-14-18)

## புளியம்பொக்கணை

# நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தரப் பொங்கல்

கிளிநொச்சி, மார்ச் 31

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் பங்குனி உத்தரப் பொங்கல் விழா, விளக்கு வைப்புடன் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆரம்பமாகி விசேட பூசையுடன் பிரம்பு வழங்குதல் வைபவம் நடைபெற்றது.

அதனைத்தொடர்ந்து அன்றைய தினம் மாலை பாரம்பரிய முறையில் மாட்டுவண்டில்களில் பிரம்பு ஆலயத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டது. நேற்று வியாழக்கிழமை அதிகாலை 5 மணியளவில் மீசாலை புத்தூர் சந்தி பண்டமரவடியைச் சென்றடைந்து விசேட பூசைகளும் நடைபெற்றன.

மீண்டும் எதிர்வரும் ஏப்ரல் 4ஆம் திகதி செவ்வாய்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மடைப்பண்டம் புறப்பட்டு 5ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு ஆலயத்தை வந்தடையும். இறுதியாக பங்குனி உத்தரப் பொங்கல் நிகழ்வுகள் 5ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ-14-113)

# பேக்கரிப் பொருள்களின் விலையில் மாற்றமில்லை

## பேக்கரி சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 31

எரிபொருள்களின் விலை குறைந்துள்ள போதிலும் பாண் உள்ளிட்ட பேக்கரிப் பொருள்களின் விலையை இப்போது குறைக்கமுடியாது என அகில இலங்கை பேக்கரி சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்தச் சங்கத்தின் தலைவர் என். கே. ஜயவர்த்தன கூறுகையில்;

கடந்த காலங்களில் எரிபொருள் விலை அதிகரித்தபோதும் பேக்கரி உற்பத்திகளின் விலைகள் அதிகரிக்கப்படவில்லை.

தற்போது பேக்கரிப் பொருள்களின் விலையை குறைக்கும் வகையில் எரிபொருளின் விலையில் திருத்தம் செய்யப்படவில்லை.

எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டு காலத்தில் எரிபொருள் விலைகள் மேலும் குறையும் பட்சத்தில் இறக்குமதி செய்யப்படும் முட்டைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படாத நிலையில் புத்தாண்டை முன்னிட்டு பாண், கேக் மற்றும் பிற பேக்கரிப் பொருள்களின் விலைகள் கண்டிப்பாகக் குறைக்கப்படும் - என்றார். (ச-இ)

# நாவலர் கலாசார மண்டபம் உரியவர்களிடமே ஒப்படைப்பு

## வடக்கு ஆளுநர் குதர்க்கம்

யாழ்ப்பாண மாநகரசபையின் ஆளுகையில் இருந்த நாவலர் கலாசார மண்டபத்தை மத்திய அரசாங்கத்துக்கு தாரைவார்க்கவோ அல்லது மாநகரசபையிடமிருந்து பறித்தோ கொடுக்கவில்லை. யாருக்குச் சொந்தமானதோ அவர்களிடமே சென்றுள்ளது என வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

ஆளுநர் செயலகத்துக்கு முன்னால் கடந்த செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துத் தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-


நாவலர் மண்டபத்தை ஆளுநர் மத்திக்குத் தரைவார்த்து விட்டார் மற்றும் மாநகரசபையிடமிருந்து பிடுங்கிவிட்டார் என கோஷமிடுவோருக்கு அது இந்து கலாசாரத் திணைக்களத்துக்குச் சொந்தமானது என நன்கு தெரியும்.

குறித்த கட்டடம் அமைந்துள்ள காணி இந்து விவகாரத்துக்கு பொறுப்பாகவிருந்த அப்போதைய பிரதேச அபிவிருத்தி அமைச்சால் கையேற்கப்பட்டு அமைச்சின் நிதியில் கட்டடப்பட்ட இந்த மண்டபத்தின் உரிமை மற்றும் நிர்வகிக்கும் முழு அதிகாரம் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்கு உரித்தானது. இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்கு உரித்தான யாழ்.நாவலர் மண்டபம் யாழ். மாநகரசபையின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டது. மீளக் கோரப்படும்போது இரண்டு மாத தவணையில் வழங்கப்படவேண்டும் என்ற நிபந்தனையும் மாநகரசபைக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

மேற்படி நாவலர் கலாசார மண்டபத்தை மீள ஒப்படைக்குமாறு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரது HA/06/NKM/01 ஆம் இலக்க 2021.08.10 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் இதுவரை ஒப்படைக்கப்படவில்லை.

இந்த நிலையிலேயே குறித்த மண்டபத்தில் இடம்பெற்ற திருப்தியற்ற செயற்பாடுகள் காரணமாக மண்டபத்தை பாதுகாக்குமாறு என்னிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அதற்கமையவே நாவலர் மண்டபம் கட்டப்பட்ட நோக்கத்தை சிறந்த முறையில் கொண்டு செல்வதற்கு தார்மிக உரிமை உடையவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மண்டபத்தை மாநகரசபையிடமிருந்து பறித்துக்கொடுக்கவில்லை - என்றார். (ச)


புத்தசாசனம், மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு
Ministry of Buddhasasana, Religious and Cultural Affairs

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் 'ஸ்ரீம்' கல்வி அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

உலக நாடுகளில் பின்பற்றப்படும் 'ஸ்ரீம்' கல்வித் திட்டம் இலங்கையில் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது. அதன் ஒருபகுதியாக வடமாகாணத்தில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியிலும் இந்தக் கல்வித்திட்டம் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது என்று வடமாகாண கல்விப் பணிப்பாளர் யோன் குயின்ரேஸ் தெரிவித்தார்.

பொறியியல், சமூகக் கல்வி, கணிதம் ஆகிய கல்வி முறையை தேசியத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். 95 நாடுகளில் பின்பற்றப்படும் இந்தக் கல்விமுறை இலங்கையில் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தக் கல்விமுறையை கொழும்பில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த அங்குரார்ப்பணம் செய்து வைக்கவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(ஓ-14-20)

## 15 வருடங்களின் பின் முன்பள்ளி ஆரம்பம்

சங்கத்தானை சாரதா சனசமூக நிலையத்தின் இளங்கோ பாலர் பாடசாலை 15 வருடங்களின் பின் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தைச் சேர்ந்த புலம்பெயர் உறவுகள், சாரதா சனசமூக நிலையத்தினர் ஆகியோரின் முயற்சியால் இளங்கோ பாலர் பாடசாலையானது சனசமூக நிலைய கட்டடத்தில் கடந்தவாரம் முதல் செயற்பட ஆரம்பித்துள்ளது.

இதன் மீள் அங்குரார்ப்பண நிகழ்வு, கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

(ஓ-14)

---

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உடுவில் லவ் லேன் 1ஆம் ஒழுங்கையில் 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

(CS34189)(K-1)

**077 809 6181, 076 483 5520**

---

## நிரு ரீயூசன் சென்ரர்

ஸ்டேசன் றோட், கோண்டாவில்.

**கல்வியாண்டு 2023**

தரம் – 3 முதல் O/L வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

(CS 22897)(K-1)

**077 796 0138**

---

## பெறுகைக்கான அழைப்பு

மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்

NP/20/FB/PROC/FOOD/2023/01

மாகாணக்கல்வித் திணைக்களத்தால் 01.05.2023 - 31.07.2023 வரையான காலப்பகுதிக்கு செயலமர்வுகள் மற்றும் நிகழ்வுகளிற்கு உணவு குடிபானம் மற்றும் சிற்றுண்டிகளை கொள்வனவு செய்வதற்காக திணைக்களப் பெறுகைக்குழு (பெரியது) முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றது.

01. பெறுகைகள் அனைத்தும் தேசிய விலைக்கேள்வி அடிப்படையில் நடைமுறைப் படுத்தப்படும்.
02. மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணம் : ரூபா 1000.00
03. பெறுகைப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளும் காலப்பகுதி: அலுவலக நாட்களில் 03.04.2023 தொடக்கம் 20.04.2023 வரையான காலப்பகுதியில் 9.00 மணிதொடக்கம் 15.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்
04. விலைக்கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய திகதியும் இடமும் : 21.04.2022 திகதி 10.00 மணிக்கு முன்பதாக வடமாகாணக் கல்வித் திணைக்கள பிரதம கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் கேள்வி நேரமுடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப் படும்.

பெயர் :- **திரு.தி. ஜோண் குயின்ரஸ்**
பதவி :- **தலைவர் / மாகாணக் கல்விப் பணிப்பாளர், திணைக்களப் பெறுகைகள் குழு,(பெரிது)**
முகவரி :- **மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம். செம்மணி வீதி, நல்லூர்**
தொலைபேசி :- 021-224-2804
தொலைநகல் :- 021-224-2646
மின்னஞ்சல் :- npedufin@gmail.com

(cr.39563) (N-1)

---

## பதவி வெற்றிடம்

### வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயம்

### (பதிவு இல: HA/5/JA/1180)

மேற்படி ஆலய சப்த தள இராஜ கோபுரத் திருப்பணி கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இத் திருப்பணி வேலையில் தற்போது இராஜ கோபுர வடிவமைப்பாளர் பதவி வெற்றிடம் நிலவுகின்றன. மேல் கூறப்பட்ட வெற்றிடத்திற்குப் பின்வரும் தகைமையுடையோரிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

- **இராஜ கோபுர சம்பந்தமான கல்வித் தகைமையுடையோர்கள் அல்லது**
- **இராஜ கோபுர வடிவமைப்பு தொடர்பான கள அனுபவமுடையவர்கள்.**

14-04-2023 ஆம் திகதிக்கு முன்னர் தங்களது சுயவிபரக் கோவை, கல்வித் தகைமை, அனுபவம் சார்ந்த சான்றிதழ்களுடன் கீழே தரப்பட்டுள்ள ஆலய முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

**ஆலய முகவரி :- தலைவர் / செயலாளர்**
**வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயம்,**
**வரணி, இயற்றாலை,**
**வரணி**

**இராஜ கோபுர வடிவமைப்பாளரின் பொறுப்புக்களும் கடமைகளும்**

- ஏற்கனவே உள்ள கோபுர வரைபடத்தை சரிபார்த்து கோபுர வடிவமைப்பை மேலும் மெருகூட்டுவதற்கான ஆலோசனைகளை வழங்குதல்.
- கட்டட ஒப்பந்ததாரரின் திருப்பணி வேலைகளை காலத்திற்கு ஏற்ப மேற்பார்வை செய்தல்.
- உறுதியான கட்டட வேலைக்கான ஆலோசனைகளையும் அனுபவங்களையும் ஆலயத்திற்கும் ஒப்பந்ததாரருக்கும் வழங்குதல்.
- திருப்பணி வேலைகளுக்கு எந்தவிதமான தடங்கல்கள் ஏற்படாதவாறு. வேலைகளை ஒழுங்கமைக்க வழிசெய்தல்.

**குறிப்பு:-** இராஜகோபுர வடிவமைப்பாளருக்கான வேலை நேரமும் வேதனக் கொடுப்பனவு உள்ளிட்ட விடயங்கள் அனைத்தும் நேரடியாக பேசித் தீர்மானிக்கப்படும்.

**மேலதிக தகவல்களுக்கான தேவை ஏற்படின்**
**செயலாளர் (TP 077 2710893)**
**பொருளாளர் ( TP 07630 81048)** தொடர்பு கொள்ளவும்

**- செயலாளர் -**
**ஆலய பரிபாலனசபை.**

(CR/39566)(AH-1)

---

## மன்னிப்புக்கோரல்

மன்னார் வீதி, 4ஆம் கட்டை சிவபுரம், வவுனியா என்ற முகவரியில் வசித்துவரும் ராஜன் கஜிதரன் ஆகிய நான் பொலிசாரினால் அனுமதிப்பத்திரம் இன்றி மருந்துப் பொருட்களை உடைமையில் வைத்திருந்ததாகக் கூறி தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் பிரிவு 131 கீழ் 56181 என்ற வழக்கு இலக்கத்தில் குற்றஞ்சாட்டப்பட்டு குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இதனை ஏற்று இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறை செய்யமாட்டேன் என உறுதிப் படுத்துகின்றேன்.

(cs.1092) (N-1) **ராஜன் கஜிதரன்**

---

## யா/ கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் - 2023

**இடம் :- பாடசாலை பிரதான மண்டபம்**
**காலம் :- 16.04.2023 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் :- முற்பகல் 9.30மணி.**

அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**தலைவர்** **செயலாளர்**

(CR/39565)(AH-1)

---

## துயர் பகிர்கின்றோம்



அமரர் **இரசிகமணி கனக.செந்திநாதன்** அவர்களின் அன்பு மகனும், எமது தற்போதய உப தலைவர் **திரு.பா.செந்தூரன்** (பாடசாலை அதிபர்) அவர்களது தாய் மாமனுமான

**துகானந்தன்**

**(முன்னாள் தலைவர் சன்மார்க்க சபை மற்றும் சன்மார்க்க இளைஞர் சங்கம்)**

அவர்கள் அவுஸ்திரேலியாவில் இயற்கை எய்தியமையினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**குரும்பசிட்டி**
**சன்மார்க்க சபையினர்.**

(CS 24208) (-6

---

## பண்டிதர் க.பேரம்பலம் அறக்கட்டளை (PCPT)

### பதிவு இல:- Trustee 02 172, 173

### மாணவர்களை இணைப்பதற்கான விண்ணப்பம்

வடக்கு மாகாண சபையின் கீழ் இயங்குகின்ற எமது அறக்கட்டளையானது வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவர்களின் கல்வித்தரம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முகமாக அவர்களின் கற்றல் செயற்பாடு முதற்கொண்டு பராமரிப்புச் செலவு உள்ளடங்கலாக அனைத்துச் செலவுகளையும் பல்கலைக்கழகம் வரை பொறுப்பேற்று செயற்படுவதை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.

**அதன் அடிப்படையில் கீழ்வரும் நிபந்தனைகளின் கீழ் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.**

01. மாணவர்கள் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாக இருத்தல் விரும்பத்தக்கது.
02. விண்ணப்பதாரர்கள் ஆண் மாணவர்களாக இருத்தல் வேண்டும்.
03. விண்ணப்பதாரர்கள் தற்போது தரம் 09, 10 இல் கல்வி கற்க வேண்டும்.
04. எமது விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்றல் வேண்டும்.
05. அறக்கட்டளையின் ஒழுக்க விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
06. விண்ணப்பங்கள் யாவும் தாமாகவே தயாரிக்கப்பட வேண்டும்.

**விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 30.04.2023 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

**குறிப்பு:-** மாணவர்கள் அறக்கட்டளையினால் இறுதியாகத் தெரிவு செய்யப்படுவார்கள். அறக்கட்டளையின் முடிவே இறுதி முடிவாகும்.

**Mr.C.P. Sivarajah**
**ஸ்தாபகர்,**
**பண்டிதர் க.பேரம்பலம் அறக்கட்டளை** (PCPT)
**35/1, பழைய பொலிஸ் நிலைய வீதி,**
**சாவகச்சேரி.**
**074 284 4262**
**தலைவர்**
**பண்டிதர் க.பேரம்பலம் அறக்கட்டளை** (PCPT)

**Mrs.A. Sivavani**
**சட்ட ஆலோசகர்,**
**பண்டிதர் க.பேரம்பலம் அறக்கட்டளை** (PCPT)
**075 711 4480,**
**E-mail:- ssvani8@gmail.com**
**செயலாளர்**
**பண்டிதர் க.பேரம்பலம் அறக்கட்டளை** (PCPT)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திறன்வகுப்பறை திறப்பு விழா

யாழ்ப்பாணம் - அராலி கிழக்கு அ.மி.த.க பாடசாலையின் திறன் வகுப்பறைத் திறப்பு விழா, அண்மையில் இடம்பெற்றது.

அமெரிக்கா ஐ.எம்.எச்.ஓ அமைப்பு, லண்டன் இரட்ணம் பவுண்டேசன் ஆகியவற்றின் நிதிப்பங்களிப்பில் திறன்வகுப்பறை அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை முதல்வர் ந.விக்கினேஸ்வரமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக இரட்ணம் பவுண்டேசன் ஒருங்கிணைப்பாளர் எஸ்.கிருஷ்ணகுமார், வலிகாமம் கல்வித்திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.லாவண்யா ஆகியோர் கலந்து கொண்டு திறன்வகுப்பறையைத் திறந்து வைத்தனர்.

(ஒ-14)


யாழ்ப்பாணம் - மிருசுவில் பகுதியில் கண் பார்வையற்றவருக்கான வீட்டுத்திட்டத்தில், அவர்களுக்கு தண்ணீர் வசதி ஏற்படுத்தும் முகமாக கனடா நாட்டின் மிட் லாண் மல்ரி மீடியா நிறுவன ஊழியர்களின் பங்களிப்பில் யாழ். மாநகர சபை உறுப்பினர் நா.தனேந்திரன் தலைமையில் விழிப்புலன் அற்றவர்களுக்கான குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு விழிப்புலன் அற்றவர்களின் தலைவரிடம் பாவனைக்காக அண்மையில் கையளிக்கப்பட்டது. (ய)





கிளிநொச்சி - கல்லாறு - கண்டாவளை மகா வித்தியாலயத்துக்கு, கனடாவைச் சேர்ந்த மிட்லான் மல்ரி மீடியா நிறுவனத்தின் நிதிப்பங்களிப்பில் பாண்ட் செட் ஒன்று லயன் கலாநிதி நா.தனேந்திரனால் பாடசாலை அதிபரிடம் அண்மையில் கையளிக்கப்பட்டது. (ய)





யாழ். ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு அதிபர் சி.நல்லகுமார் தலைமையில் மேற்படி பாடசாலை முன்றிலில் கடந்த 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடைபெற்றது. (ய-66)





அராலி வள்ளியம்மை முருகமூர்த்தி வித்தியாசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு, பாடசாலை மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

பாடசாலை முதல்வர் தி.நவரத்தினம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவ சித்தாந்தத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இ.ஜெயந்திரன் கலந்துகொண்டார்.

(ஒ-14)



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பசுந்தேசம் அமைப்பின் ஒழுங்கமைப்பில், யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவும் கைதடி சித்த போதனா வைத்திய சாலையும் இணைந்து நடத்திய 'ஆரோக்கியமான பெண்கள் சமுதாயம்' எனும் தொனிப்பொருளில் இலவச விழிப்புணர்வு மருத்துவ முகாம் கைதடி அன்னை இரத்தினம் மணிமண்டபத்தில் கடந்த 18ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது. (ய-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண் பரிசோதனை முகாம்

யாழ்.மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளிகளுக்கு நன்கொடையாளர்களின் உதவியுடன் யாழ்.போதனா மருத்துவமனையில் இலவசமாக கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கான நோயாளர்களைத் தெரிவுசெய்யும் நான்காவது கண் பரிசோதனை முகாம் நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் புங்குடுதீவு பிரதேச மருத்துவமனையில் நடைபெறவுள்ளது.

கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் கண் பரிசோதனை முகாமில் கலந்துகொண்டு தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி. ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஒ-14)

## உடல் அசைவு மாதமாக ஏப்ரல் மாதம் பிரகடனம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

சுகாதாரத் திணைக்களத்தால் ஏப்ரல் மாதம் உடல் அசைவு மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் 18 வயதுக்குட்பட்டோர் தினமும் ஒரு மணி நேரம் உடற்பயிற்சியும் அதற்கு மேற்பட்டோர் தினமும் அரைமணி நேரம், உடற்பயிற்சியும் மேற்கொள்ளவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் நடப்பதும், சைக்கிளில் பயணிப்பதும் வெகுவாகக் குறைந்துள்ளதால் பல்வேறு தொற்றா நோய்கள் ஏற்பட்டு வருகின்றன. நடை மற்றும் சைக்கிள் பயணம் போன்றவைகளால் உடல் அசைவு ஏற்பட்டு நோய்கள் ஏற்பட வாய்ப்பு இல்லாமற் செல்கிறது. இவற்றைக் கருத்திற்கொண்டே ஏப்ரல் மாதத்தை உடல் அசைவு மாதமாகப் பிரகடனப்படுத்தி அனைவரும் உடற்பயிற்சிகள் மேற்கொள்ளவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி நாட்டின் பல சுகாதார மருத்துவ அதிகாரி பணியகங்களால் விழிப்புணர்வு நடைபவனி மற்றும் சைக்கிள் பவனி போன்றவற்றை நடத்தி உடல் அசைவு மாதத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஒ-14-9)

50

கோட்டை அரண்களுக்கு அப்பால்...



கி.பி 1619 இல் போர்த்துக்கேயர்களால் ஒரு பாதுகாப்பு மற்றும் நிர்வாக மையமாக கட்டப்பட்ட யாழ்ப்பாணக் கோட்டை, 1680 இல் ஒல்லாந்தரால் விரிவாக்கப்பட்டு, பலமான சுவரால் சூழப்பட்டு இன்றும் தலைநிமிர்ந்து நிற்கிறது. இத்தகைய பெருமைமிக்க யாழ்ப்பாணம், பொருளாதாரம் என்ற சுவருக்குள் சிக்கிக் கொள்ளாமல் அதைத் தாண்டிச் செல்வதற்கு ஏணியாக, யாழ்ப்பாண மக்களின் உற்சாகமான வாழ்க்கைப் பயணத்திற்கு அசைக்க முடியாத நிதியுதவியாக,

நாடு முழுவதும் வேகமாக வியாபிக்கும் ஒரு பெரிய கிளை வலையமைப்பைக் கொண்டுள்ள, இலங்கையின் நிதித்துறையில் நம்பிக்கை மற்றும் ஸ்திரத்தன்மை நிறைந்த

சிங்கர் ஃபினான்ஸ்

வெற்றிகரமான 50 வது கிளை

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் இலக்கம் 462 A, இல் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை நாங்கள் பெருமிதத்துடனும் பணிவுடனும் அறிவிக்கிறோம்.

011 2 400 400

The World Of Hayleys

SINGER FINANCE

ஹேலீஸ் குழுமத்தின் உறுப்பு நிறுவனம்

E-mail: financecompany@singersl.com | Web: www.singerfinance.com | Facebook: SingerFinancePLC

# நடைபாதை வியாபாரத்தால் சந்தை வியாபாரம் பாதிப்பு!

## வாணிப உரிமையாளர்களால் மனு கையளிப்பு

முல்லைத்தீவு - நடைபாதை வியாபாரிகளால் சந்தை வியாபாரிகளது வியாபாரம் வீழ்ச்சியடைந்து வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது.

நடைபாதை வியாபாரத்தை உடன் தடைசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என புதுக்குடியிருப்பு பொதுச் சந்தை வாணிப உரிமையாளர்கள் முல்லைத்தீவு உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு மனுவொன்றைக் கையளித்துள்ளனர்.

அந்த மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

புதுக்குடியிருப்புச் சந்தியிலிருந்து பரந்தன் வீதியிலும் புதுக்குடியிருப்புச் சந்தியிலிருந்து முல்லைத்தீவு வீதியிலும் நடைபாதை வியாபாரங்கள் இடம்பெற்று வருகின்றன. கொரோனாத் தொற்றுக் காலப்பகுதியில் நடைபாதை வியாபாரத்துக்கு அனுமதியளிக்கப்பட்டது. தற்போது கொரோனா ஒழிக்கப்பட்ட நிலையிலும் நடைபாதை வியாபாரம் தடைசெய்யப்படவில்லை. நடைபாதை வியாபாரிகள் வீதியோரங்களில் கடைகளை அமைத்து நிரந்தரமாகவே வியாபாரம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு கைவேலி சந்தையிலோ அல்லது முல்லைத்தீவு மந்துவில் சந்தைப் பகுதியிலோ வியாபாரம் செய்ய அனுமதியளிக்கப்படுவதால் எமக்கு எவ்வித பாதிப்பும் இல்லை. இரண்டு சந்தைகளையும் தவிர இடைப்பட்ட பகுதிகளில் நடைபாதை வியாபாரங்களினாலேயே பொதுச்சந்தைக்கு நாளாந்தம் மக்கள் வருகை மிகவும் குறைவடைந்து எமது வியாபாரமும் வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் வியாபார ரீதியாக மிகவும் பாதிப்படைந்துள்ளோம் - என்றுள்ளது. (ச-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்சிந்தனை பாராயணம்



யாழ்ப்பாணம், மார்ச் 31
ஈழத்துச் சித்தர் யோகர் சுவாமிகளின் 59ஆவது ஆண்டு குருபூசையை முன்னிட்டு யோகர் சுவாமிகளின் தொண்டர்களும், அடியவர்களும் இணைந்து ஏற்பாடு செய்த விசேட நற்சிந்தனைப் பாராயண நிகழ்வு, நல்லூர் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மட யோகர் சுவாமி அம்பலவாணர் மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. இந்த நற்சிந்தனைப் பாராயணம் இன்று வெள்ளிக்கிழமையும் இடம் பெற்று இறுதியாக முற்றோதல் நிகழ்வும் இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-14.66)

# வடமராட்சியில் தொடர் திருட்டு

## பிரதான சந்தேகநபர் கைது!பல்வேறு பொருள்களும் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31
வடமராட்சிப் பகுதியில் நீண்ட காலமாக திருட்டில் ஈடுபட்டு வந்த பிரதான சந்தேகநபர் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார் என்று நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி காஞ்சனா விமலவீர தெரிவித்தார். கரவெட்டி கிழக்கு, காட்டுப்புலம் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய நபர் ஒருவரே பிரதான சந்தேகநபராகக் கைது செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடிப் பகுதியில் இடம்பெற்ற தொடர் திருட்டு தொடர்பில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் பல முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன.

முறைப்பாடுகளுக்கமைய விசாரணைகளை மேற்கொண்டு வந்த நிலையில் நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி காஞ்சனா விமலவீரவுக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய பிரதான சந்தேகநபர் நேற்றுமுன்தினம் அதிகாலை கைது செய்யப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் பல இடங்களில் திருடப்பட்ட ஒளிப்படக் கருவி, தொலைக்காட்சிப் பெட்டி, இரண்டு எரிவாயு சிலிண்டர், இரண்டு பவுண் சங்கிலி போன்றன மீட்கப்பட்டன என்றும் நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ஓ-14-20)


# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி ஜெயராஜ் டயானா**
அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி அன்ரனி றெஜினா**
அவர்கள் 29.03.2023 இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரிய நலன்புரிக்கழகம்**
**யா/மண்டைதீவு றோ.க. வித்தியாலயம்,**
**மண்டைதீவு.**

(CS 24211) A-1

# விண்ணக வாழ்வின் பதினைந்தாம் வருட நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 20 - 06 - 1938 | 31 - 03 - 2008 |

## அமரர் சுப்பிரமணியம் யோசேப் பூராசா

(ஓய்வுபெற்ற அதிபர், புனித அந்தோனியார் ஆலய முன்னாள் செயலாளர், புனித அந்தோனியார் தெய்வக்குழந்தைகள் இல்ல முன்னாள் இயக்குனர்)

"நேர்மையாய் நடந்தவர்கள் சமாதானத்துக்குள் பிரவேசித்துத் தங்கள் படுக்கைகளில் இளைப்பாறுகிறார்கள்." (எசாயா 57:2)

புங்குடுதீவு - 02

என்றும் நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS 22581) K-1

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28 . 12 . 1945 | 02 . 03 . 2023 |



கடந்த 02.03.2023 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் சதாசிவம் இராமலிங்கம்

அப்பா எனும் நாமம் கொண்டு
நெஞ்சு நிறை அன்பு தந்து
எல்லையே என்றும் காணா
உள்ளத்து உம் பொறுமைகொண்டு
நேசித்த எம் அப்பாவே!

இன்முகம் காட்டி நின்று
அம்மாவின் சொத்து ஆனீர்
உழைப்பால் உயர்ந்துநின்று - ஊரின்
கண்ணும்பட வாழ்ந்து போனீர்.

வஞ்சகமே கொண்டிராது
வாழ்ந்துபோன பெருந்தகையே - இன்னும்
கொஞ்சக் காலம் நீண்டிருந்தால்
பஞ்சமேது பாசத்திற்கு

எம்மருகில் நிழலாகி நீர் இருந்து
பத்திரமாய் பார்த்துக்கொள்ளும்
நிகரில்லா நின் ஆன்மா
நிம்மதியாய் சஞ்சரிக்க
நித்தம் உம் நினைவுகளோடு
சுற்றமும் நாமும்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (31.03.2023) வெள்ளிக்கிழமை பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மடத்தடி மேற்கு வீதி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## அமரர் முத்தையா நித்தியானந்தம்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1956.06.21 | 2023.03.29 |



காரைநகர் இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா நித்தியானந்தம் 29.03.2023 புதன்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற முத்தையா தங்கமுத்து ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சோமசுந்தரம் இராசபூபதி அவர்களின் அன்பு மருமகனும் புஸ்பராணியின் அன்புக் கணவரும் பிரசாந்தி, நவரூபன், தவறஞ்சன், பிரதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கமலநாதனின் மாமனாரும் காலஞ்சென்ற பரமானந்தம், பரஞ்சோதி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் 'சற்குணராஜா, தவநாயகம் ஆகியோரின் அன்பு சகோதரனும் புஷ்பகாந்தி, சுந்தரகாந்தி, நாகரத்தினம், நிர்மலா, பிரேமாம்பிகை, சண்முகநாதன், காலஞ்சென்ற தர்மராசா, செல்வராசா, காலஞ்சென்ற சற்குணராஜா, உமாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.04.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் , அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:குடும்பத்தினர்**

இடைப்பிட்டி
காரைநகர்

077 47 29 867
077 25 81 376


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை...

யுறுத்தவேண்டாம் என்றும் இலங்கை
அரசாங்கம் அழுத்தம் வழங்குகின்றது
என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமை
கள் சபையில் சுட்டிக்காட்டியுள்ளார்
கஜேந்திரகுமார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின்
52ஆவது அமர்வில் நேற்று உரையாற்
றுகையிலேயே அவர் இவ்வாறு தெரி
வித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
திட்டச் செயற்பாட்டுக்கான வியன்னா
பிரகடனத்தின் ஒரு பகுதியில், வலிந்து
காணாமற்போகச் செய்தலை தடுப்பதற்
கும், அவ்வாறான செயலைச் செய்பவர்
கள்மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு
மாக வினைத்திறன்மிக்க சட்டரீதியான
நிர்வாக ரீதியான நடவடிக்கைகளை
மேற்கொள்ளுமாறு, அனைத்து நாடு
களுக்கும் அறிவுறுத்தப்பட்டிருக்கின்
றது. நாடுகள், தமது ஆட்புல எல்லைக்
குள் இவ்வாறான நடவடிக்கைகள் நடை
பெறுவதாக நம்புவதற்கு இடமிருக்கும்
போது, அவை தொடர்பில் விசாரணை
களை மேற்கொள்ளவேண்டியது அந்த
நாடுகளின் கடமை என்பதையும், இக்
குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால்
சம்பந்தபட்டவர்கள் மீது, சட்ட நடவடிக்கை
மேற்கொள்ளவேண்டும் என்பதையும்
அந்தப்பிரகடனம்மீளவலியுறுத்துகிறது.
இது இவ்வாறிருக்கையில், இந்த வருடம்
பெப்ரவரி மாதம் சிறிலங்காவின் மனித
உரிமை ஆணைக்குழுவைச் சேர்ந்தவர்
கள் வடமாகாணத்துக்குப் பயணம் மேற்
கொண்டு, பாதிக்கப்பட்ட தரப்புகளான
வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின்
உறவினர்கள், சிவில் சமூகச் செயற்பாட்
டாளர்கள், தமிழ் அரசியற்கட்சியைச்
சேர்ந்தவர்கள் எனப் பலரையும் சந்தித்
தனர். இந்தச் சந்திப்புகளின்போது,
பழையவற்றை மறந்துவிடுமாறும்,
பொறுப்புக் கூறலை வலியுறுத்தவேண்
டாம் எனவும் முன்னைய குற்றச்செயல்
கள் பற்றிய விடயங்களை சிறிலங்கா
அரசாங்கத்தால் அமைக்கப்படவுள்ள
உண்மையைக் கண்டறியும் ஆணைக்
குழு கையா ளும் எனவும், தாம் சந்தித்
தவர்களிடம் பரப்புரையில் ஈடுபட்டது
டன், அழுத்தங்களையும் பிரயோகித்
துள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களும், தமிழ்ச் செயற்
பாட்டாளர்களும் இந்த ஆலோசனை
களை நிராகரித்து, சர்வதேச குற்றவியல்
பொறுப்புக்கூறல் பொறிமுறையை
வலியுறுத்தியபோது, சிறிலங்கா மனித
உரிமை ஆணைக்குழுவின் பிரதிநிதிகள்
தங்களது கோபத்தை வெளிப்படுத்தியுள்
ளனர். மேற்படி ஆணைக்குழு தனது
களப்பயணத்தை முடித்துக்கொண்டு
வெளியிட்ட அறிக்கையில், உண்மை
யைக் கண்டறியும் ஆணைக்குழு
போன்ற உள்ளகப் பொறிமுறையை
அமைப்பதற்கு, தாம் சந்தித்த பாதிக்கப்
பட்ட தரப்புகள் இணங்கிக்கொண்டதாக
தவறாகக் குறிப்பிட்டுள்ளது. மேலும் பல
தவறான தகவல்கள் அவ்வறிக்கையில்
காணப்படுகின்றன. இந்நிலையில், சிறி
லங்காவின் மனித உரிமைகள்
ஆணைக்குழு நடுநிலையானது என
ஐ.நா. மனித உரிமைச் சபையானது,
இனியும் நம்புமா?

**உரிமைக்காக எவ்வளவு காலம்
தமிழர்கள் காத்திருக்கவேண்டும்**

இதே வியன்னா பிரகடனம், 'எல்லா மக்
களும் சுயநிர்ணய உரிமைக்கு உரித்து
டையவர்கள். இந்த நெறிமுறைகளின்
படி, தமது அரசியல் நிலைப்பாட்டையும்,
பொருண்மியம் மற்றும் சமூக கலாசார
விடயங்களையும் மேற்கொள்ளும் வழி
வகைகளைத் தீர்மானிக்கும் உரித்துடை
யவர்களாக அவர்கள் இருப்பர்' என்று
குறிப்பிடுகின்றது. இதன்படி, மக்களின்
சுயநிர்ணய உரிமையை மறுதலிப்பது
மனித உரிமை மீறலாகவும், அவர்களது
உரிமையை முறைப்படி நிலைநாட்டு
வதை மறுதலிக்கும் செயல் எனவும்
குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்மக்கள் தமது பொருண்மிய, சமூக,
கலாசார மேம்பாட்டை மேற்கொள்வதற்
கான உரிமையை, தொடர்ச்சியாக ஆட்
சிக்கு வந்த சிங்களப் பெரும்பான்மை
அரசாங்கங்கள் மறுத்துவந்த காரணத்
தாலும், தமிழ் மக்களது இருப்புக்கு
ஆபத்து உருவாகி வந்ததனாலும்,
1977ஆம் ஆண்டு, தமது சுயநிர்ணய
உரிமையின் அடிப்படையில் ஒரு தனி
நாட்டை அமைப்பதற்கு ஆதரவு வழங்கி,
ஜனநாயக ரீதியில் பெருந்திரளாக வாக்
களித்தார்கள்.

அதன்பின்னர், சிறிலங்கா அரசாங்கம்
அரசமைப்பில் கொண்டுவந்த 6ஆவது
திருத்தத்தின் அடிப்படையில், தனிநாடு
கோருவதை சட்டவிரோதமான செய
லாக ஆக்கியுள்ளது. நடைமுறையில்
இவ்விடயம் தவறாகவியாக்கியானப்படுத்
தப்பட்டு வருகிறது. தற்போது நடை
முறையிலிருக்கின்ற, மத்தியில் அதி
காரங்களைக் குவித்து வைத்திருக்கும்
ஒற்றையாட்சி முறையிலான அரசமைப்
பிலிருந்து, அதிகாரப் பரவலாக்கத்தை
நோக்கிய மாற்றங்கள் பரிந்துரைக்கப்
படுவதைக்கூட, பிரிவினைவாதமாகப்
பார்க்கப்படும் நிலையே காணப்படுகி
றது. இதன் விளைவாக, தமது அரசியல்
நிலைபாடு தொடர்பில் காத்திரமான
உரையாடலுக்கான வெளி, தமிழ்மக்க
ளுக்கு மறுக்கப்படுகிறது. தமது உரிமை
களை அடைவதற்கு தமிழ் மக்கள் இன்
னமும் எவ்வளவு காலம்தான் காத்தி
ருக்கவேண்டும்? - என்றார். (அ-ம)

## பௌத்த...

நிர்வாகத்தினர் கோரியுள்ளனர்.

குருந்தூர்மலையில் நீதிமன்றத்தின் உத்
தரவை மீறிய வகையில் பௌத்த
விகாரை அமைக்கும் பணிகள் தொடர்ச்
சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன
என்பதைச் சுட்டிக்காட்டி குருந்தூர்மலை
ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தின் சார்
பில் கடந்த 2ஆம் திகதி நீதிமன்றத்தில்
முறையீடு ஒன்று செய்யப்பட்டது. இதை
யடுத்து, குருந்தூர்மலை விவகாரத்தில்
அவ்வாறு நீதிமன்றக்கட்டளை மீறப்பட்
டுள்ளதா என்பது தொடர்பில் முல்லைத்
தீவு பொலிஸார் மற்றும், தொல்லியல்
திணைக்களம் ஆகிய தரப்பினர் நேற்று
முன்னிலையாகி தமது அறிக்கைகளை
சமர்ப்பிக்கவேண்டுமென முல்லைத்தீவு
மாவட்ட நீதிவான் ரி.சரவணராஜா
உத்தரவிட்டிருந்தார்.

அதற்கமைய குறித்த வழக்கானது
நேற்று விசாரணைக்காக எடுத்துக்
கொள்ளப்பட்டது. தொல்லியல் திணைக்
களப் பணிப்பாளர் நாயகம் அனுரமான
துங்க உள்ளிட்ட குழுவினர், பொலிஸார்
ஆகியோர் மன்றில் முன்னிலையாகி
யிருந்தனர். குருந்தூர்மலை ஆதிசிவன்
ஐயனார் ஆலய நிர்வாகம் சார்பில் முன்
னாள் வடமாகாணசபை உறுப்பினர்
துரைராசா ரவிகரன், கந்தையா சிவ
நேசன், சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன்
உள்ளிட்டவர்கள் மன்றில் முன்னிலை
யாகியிருந்தனர்.

இதன்போது குருந்தூர்மலைப் பிரதேசத்
தில் நீதிமன்றக் கட்டளையைமீறி பௌத்த
விகாரைக்குரிய கட்டுமானப் பணிகள்
தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதானது,
நீதிமன்றத்தை அவமதித்து இடம்பெறு
கின்ற செயற்பாடு என்று குருந்தூர்மலை
ஆதிசிவன் ஐயனார் ஆலயம் சார்பில்
மன்றில் முன்னிலையான சட்டத்தரணி
கள் சுட்டிக்காட்டியிருந்தனர். அத்துடன்,
இது நீதிமன்றத்தின் மீது மக்கள் கொண்
டுள்ள நம்பிக்கையைக் கேள்விக்குள்
ளாக்கும் செயற்பாடு என்றும், குருந்தூர்
மலைப் பிரதேசத்துக்கு நீதிவான் நேரடி
யாக வருகைதந்து அங்கு இடம்பெறும்
விடயங்களைப் பார்வையிட்டு, வலிதான
கட்டளை ஒன்றை வழங்கவேண்டுமென
வும் சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்
தனர். சமர்ப்பணங்களைத் தொடர்ந்து
இந்த விவகாரத்தில் பொலிஸாரும்
தொல்லியல் திணைக்களத்தினரும்
அறிக்கை சமர்ப்பிப்பதற்காக எதிர்வரும்
27ஆம் திகதிக்கு வழக்குத் தவணையி
டப்பட்டுள்ளது. (அ-ம-246)

## இப்போது...

'ஐ.எம்.எப். மற்றும் அதற்கு அப்பால்'
என்ற தொனிப்பொருளில் நேற்று இடம்
பெற்ற கலந்துரையாடலில் பிரதான
உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி
ரணில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
1978ஆம் ஆண்டு இனப்பிரச்சினை
தீவிரமடைந்ததைத் தொடர்ந்து நாட்டின்
பொருளாதாரம் வீழ்ச்சியடைத் தொடங்
கியது. நாங்கள் பல சந்தர்ப்பங்களை
தவறவிட்டுவிட்டோம். டி.எஸ்.சேனநா
யக்கவின் தீர்மானங்களை நிறைவேற்
றத் தவறிவிட்டோம். 1965ஆம் ஆண்
டில் ஷெனாய் தீர்மானங்களை நிறை
வேற்றத் தவறிவிட்டோம். இனப்பிரச்சி
னையை பிரதான பொருளாதாரப் பிரச்
சினையிலிருந்து பிரிக்கமுடியாது. நாடு
அபிவிருத்தியடைய வேண்டுமானால்
அதற்குத் தீர்வு காணப்படவேண்டும்.
இப்போது, கல்வி, சுகாதாரம், வறிய மக்
கள் மற்றும் தங்கி வாழ்வோருடைய
வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவ
தற்கே நிதி தேவை. பெற்றோலியத்துக்
கும் மின்சாரத்துக்கும் அல்ல. நாட்டின்
வளங்கள் பெற்றோலியத்துக்கும் மின்
சாரத்துக்கும் வீணடிக்கப்பட்டுள்ளன.
பசுமைப் பொருளாதாரத்துக்கு இலங்
கையிலுள்ள சாத்தியக்கூறுகள் சாதக
மாகவுள்ளன. நாடு அதனை நோக்கிச்
செல்வதுடன், விரைவில் டிஜிற்றல் மய
மாக்கலை ஆரம்பிப்பதன் அவசியமும்
இப்போது உணரப்பட்டுள்ளது. அரசாங்
கம் தொடங்கியுள்ள இந்தத் திட்டத்தில்
அனைவரும் இணைந்துகொள்ளுமாறு
உங்கள் அனைவரையும் நான் மீண்
டும் கேட்டுக்கொள்கிறேன்' - என்றார்.
(அ-ம)

## தொல்பொருள்...

வவுனியா, வெடுக்குநாறிமலை ஆதி
லிங்கேஸ்வரர் ஆலயத்தில், பேரினவாத
தீயசக்திகளால் மேற்கொள்ளப்பட்ட
அடாவடிக்கு எதிராக, வவுனியாவில்
நேற்று இடம்பெற்ற போராட்டம் தொல்
பொருள் திணைக்கள வளாகத்துக்குள்
நுழைய முற்பட்டதால் அந்தப் பகுதியில்
நேற்றுப் பதற்றம் ஏற்பட்டது.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற
போராட்டத்தில் கலந்துகொண்ட பொது
மக்கள், பேரணியாகச் சென்றுகொண்டி
ருந்தபோது, வவுனியா கொறவப்பொத்
தான வீதியில் அமைந்துள்ள தொல்
பொருள் திணைக்களத்தின் பிராந்திய
அலுவலகத்துக்குள் திடீரென உள்நு
ழைந்து, 'தொல்பொருள்திணைக்களமே
நில அபகரிப்பை நிறுத்து', 'இந்து ஆல
யங்கள் ஆக்கிரமிக்கப்படுவது ஏன்?',
'வடக்கு - கிழக்கில் இருந்து தொல்பொருள்
திணைக்களம் வெளியேற்றப்பட வேண்
டும்' என்று கோஷமெழுப்பி ஆர்ப்பாட்டத்
தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பதற்
றமான நிலைமை உருவானது. பின்னர்
தொல்பொருள் திணைக்கள வளா
கத்தை விட்டு அவர்கள் வெளியேறி
யதை அடுத்து நிலைமை கட்டுக்குள்
வந்தது. (அ-ம-110)

## வவுனியாவில்...

கப்பட்டமையையும் கண்டித்து வவுனியா
வில் நேற்றுப் பெரும் போராட்டம் முன்
னெடுக்கப்பட்டது.

'இன நல்லிணக்கம் தொடர்பில் மீண்டும்
மீண்டும் கருத்துத் தெரிவிக்கும், ஜனாதி
பதி ரணில் விக்கிரமசிங்க வெடுக்குநாறி
மலை மீதான, பேரினவாதத்தின் அராஜ
கங்களுக்கு எதிராக என்ன நடவடிக்கை
களை மேற்கொள்ளப்போகின்றார்?',
'இந்துக்களின் தொன்மையான வர
லாற்றைத் திரிவுபடுத்தி முனையாதே',
'மண் துறந்த புத்தருக்கு மண்மீது
ஆசையா?' 'தொல்பொருள் திணைக்
களமே இந்துக்களின் பூர்வீகப் பகுதிகளில்
இருந்து வெளியேறு' உள்ளிட்ட வாசகங்
கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு
அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
வவுனியா கந்தசாமி ஆலய வளாகத்
துக்கு முன்பாக நேற்றுக் காலை 9.30
மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப்
போராட்டம், வவுனியா மணிக்கூட்டுச்
சந்திக்கூடாக மாவட்டச் செயலகம் வரை
சென்றடைந்தது. மாவட்டச் செயலகத்
துக்கு முன்னால் இடம்பெற்ற போராட்
டங்களைத் தொடர்ந்து வவுனியா மாவட்
டச் செயலர் பீ.ஏ.சரத்சந்திரவிடம் மனு
வொன்றும் கையளிக்கப்பட்டது. ஜனாதி
பதிக்கான மனுவொன்று, ஜனாதிபதி
யின் வடக்குக்கான இணைப்பாளரும், மேல
திக செயலாளருமான ஈ.இளங்கோவனி
டம் கையளிக்கப்பட்டது. இது தொடர்பில்
ஜனாதிபதியின் கவனத்துக்கு உடனடியா
கக் கொண்டுசென்று நடவடிக்கைகள்
முன்னெடுக்கப்படும் என்று ஜனாதிபதி
யின் இணைப்பாளர் தெரிவித்தார்.

குறித்த போராட்டத்தில் நாடாளுமன்ற
உறுப்பினர்களான செல்வம் அடைக்கல
நாதன், வினோநோகராதலிங்கம்,
சார்ள்ஸ்நிர்மலநாதன், சி.சிறீதரன்,
செ.கஜேந்திரன், தமிழரசுகட்சியின்
தலைவரும் நாடாளுமன்ற முன்னாள்
உறுப்பினருமான மாவை.சேனாதி
ராஜா, நாடாளுமன்ற முன்னாள் உறுப்
பினர்களான ஈ.சரவணபவன், சிவசக்தி
ஆனந்தன், சி.சிவமோகன், பொது
அமைப்பினர், அரசியல் கட்சிகளின்
பிரதிநிதிகள், சமயப் பெரியோர்கள், சமூக
ஆர்வலர்கள், பல்கலைகழக மாணவர்
கள், முன்னாள் மாகாணசபை உறுப்பி
னர்கள், காணாமற்போன உறவுகளின்
சங்கத்தினர், பொதுமக்கள் எனப் பலரும்
கலந்துகொண்டனர். (அ-ம-18,110)

## வரவுள்ள...

புதிய பயங்கரவாதத் தடைச்சட்டவரைவு
வர்த்தமானியில் வெளியாகியுள்ளது,
இது பயங்கரமானது. இருந்த சட்டத்தை
விட 10 மடங்கு பயங்கரமானது. பேரணி
சென்றால் அதனை பயங்கரவாதச்
செயல் ஆக்கலாம். நபர்கள் கைது செய்
யப்படலாம். அது தொடர்பான செய்தி
களை வெளியிட்டால் அதற்கு எதிராக
வும் நடவடிக்கை எடுக்கப்படும். பிரதி
பொலிஸ்மா அதிபரால் தடுப்பு உத்த
ரவை வழங்கலாம். அதனை சவாலுக்
குட்படுத்தமுடியாது. இந்த சட்டவரை
வுக்கு எதிராக நாம் நீதிமன்றத்தை நாடு
வோம். இருந்த சட்டவரைவு பயங்கரமா
னது என்பதால்தான் அதை நீக்கவேண்
டும் என வலியுறுத்தப்பட்டது. ஆனால்,
இருந்ததைவிடவும் மோசமான சட்ட
வரைவு கொண்டுவரப்பட்டுள்ளது' - என்
றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உரிமையை...

நாயக்க தெரிவித்தார். இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்குப் பிரச்சினைகள் தொடர்பில் நீண்டகாலமாகக் கதைத்துக் கொண்டிருக்கின்றோம். உண்மையில் இந்தப் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வை அரசமைப்பு ரீதியாகக் காண வேண்டும். வடக்கு - கிழக்கை அபிவிருத்தி செய்து, அப்பகுதியில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கினால் போதும், வேறொன்றும் அவசியமில்லை என சிலர் கூறுகின்றனர். இது ஏற்புடைய கருத்தல்ல. இவ்வாறான கருத்தை நம்ப வேண்டாம். அவர்களுக்கான (வடக்கு - கிழக்கு மக்களுக்கு) உரிமைகளை வழங்க முடியாதா? உரிமைகளை வழங்காவிடின் இப்பிரச்சினை தீரப்போவதில்லை. இனப்பிரச்சினையை இனியும் நீடிக்க இடமளிக்கக் கூடாது - என்றார்.

(அ-ம-44)

## புதிய...

விவரங்களை வெளியிடவேண்டும் என்று நிதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

'புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டத்துக்கான, சட்டவரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. அது வர்த்தமானியில் வெளியிடப்படுவதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தொடர்பில் மக்கள் மத்தியில் நம்பிக்கை குறைவடைந்துள்ளது. எனவே, அந்த ஆணைக்குழுவுக்கு புதிய சட்டத்தின் பிரகாரம் கூடுதல் அதிகாரம் வழங்கப்படும். கடந்த காலங்களில் சுயாதீனத் தன்மையைக்கருதி ஓய்வுபெற்றவர்கள் ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்டனர். ஆனால், சேவைகள் சிறப்பாக இடம்பெறவில்லை. எனவே, சிறப்பாக செயற்படக்கூடியவர்களை நியமிப்பதற்கும் ஏற்பாடுகள் உள்ளன. சொத்து விவரங்களை வெளியிடுவது ஒரு சிலருக்கு விலக்களிக்கப்பட்டுவந்தது. எனினும், புதிய சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதி, மாகாண முதல்வர்கள், ஆளுநர்கள், தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோரும் சொத்து விவரங்களை வெளியிட வேண்டும்' - என்றார்.

(அ-ம-44)

## சவேந்திர...

கள் இடம்பெற்று வருகின்றன என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் மே மாதம் அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட கலவரங்களின்போது, வன்முறைகளை உரிய முறையில் கட்டுப்படுத்தத் தவறினார் என்ற குற்றச்சாட்டை பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சவேந்திர மீது முன்வைத்திருந்தனர். இந்த நிலையிலேயே சவேந்திர சில்வாவை அந்தப் பதவியில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது.

(அ-ம-22)

## தீயில்...

இவ்வாறு உயிரிழந்துள்ளது.

கடந்த 23ஆம் திகதி தனது தாயுடன் குழந்தை தூங்கிக் கொண்டிருந்துள்ளது. யானைச் சத்தம் கேட்டதால் பாதுகாப்புக் காரணங்களுக்காக குழந்தையின் தாயார் வெளியில் வந்து பார்த்துள்ளார். இதன்போது உறங்கிக் கொண்டிருந்த குழந்தை உருண்டு சென்று குப்பிவிளக்கைத் தட்டியுள்ளது. இதையடுத்து குழந்தைமீது தீ பரவியுள்ளது. உடனடியாக தீ அணைக்கப்பட்டு முதற்கட்ட சிகிச்சைகளின் பின்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மேலதிக சிகிச்சைக்காக குழந்தை சேர்க்கப்பட்டுள்ளது. எனினும் சிகிச்சை பயனின்றி நேற்று அந்தக் குழந்தை உயிரிழந்தது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார்.

(அ-ம-26)


## உதவியாளர் தேவை

யாழ்.நகரில் உள்ள பிரபல கவறிங் நகைகள் விற்பனை நிலையத்திற்கு உதவியாளர்கள் தேவை.

(cs24201) (N-1)

077 351 5980, 077 005 5990

## காணி விற்பனைக்கு

ஏ 9 வீதியிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்துக்கு முன்பாக 3 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

(CB 39535)(K - 1)

தொடர்பு : 076 256 3463

## Vacancy

**Data Entry Operator**

Gender - Female
Age - 20 - 35
Salary - 20,000 - 30,000
Expected - Tamil typing, Photoshop, HTML, English
Experience - 2 Years

Contact:- 076 362 2747

(CS/22580) AH-1

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 78 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை 200.000/-
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்

**பார்வையிடும் நேரம் காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை**

தொடர்பு:- 076 733 6047
076 333 6079
076 733 6093

(cs22599) (N.I)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **அச்செழுப்** பகுதியில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ அச்செழு வடக்கு நீர்வேலி வல்லியப்பர் சிவன் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
- ✓ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- ✓ நன்னீர் ஊற்று (குழாய்க் கிணறு உள்ளது).
- ✓ 1 பரப்பின் விலை காபெற் வீதியை பிரதான முகப்பாக கொண்ட காணிகள் 15 இலட்சம்.
- ✓ 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணிகள் 14 இலட்சம் தொடக்கம் 12 இலட்சம் வரையும் உள்ளது.

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

**தொடர்புகளுக்கு: ஜெயம்**

077 8147 389
077 9865 457

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **சாவகச்சேரிப்** பகுதியில் 20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- ✓ A-9 பிரதான வீதியில் இருந்து 700M தூரம்.
- ✓ காய்க்கும் தென்னைகள் 120 உள்ளன.
- ✓ 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✓ ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 15 லட்சம் வரை

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**


தரகர் தேவையில்லை.

**தொடர்புகளுக்கு: ஜெயம்**

077 8147 389
077 9865 457

(CS 24206) A-1


## மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 29 . 11 . 1948 |  | 30 . 03 . 2023 |

### திரு.கணபதிப்பிள்ளை நகுலேஸ்வரன்

உரும்பிராய் வடக்கை பிறப்பிடமாகவும் அளவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட திரு.கணபதிப்பிள்ளை நகுலேஸ்வரன் நேற்று (30.03.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - யோகேஸ்வரி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சின்னத்துரை- விசாலாட்சி தம்பதியரின் மருமகனும், ராசமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பிரகாஷ் மற்றும் கல்யாணி (கனடா), பிரசன்னா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்கந்தகுமாரனின் (கனடா) மாமனாரும், பிரிஷ்ஷாவின் (கனடா) அன்புத் தாத்தாவும், திரவியராணி (கொழும்பு), காலஞ்சென்ற நிர்மலானந்தன், மகேந்திரராஜா, இராசமலர், சுசீலாதேவி (ஜேர்மனி), குணேந்திரராஜா (ஜேர்மனி) மற்றும் ரவீந்திரன் (லண்டன்) ஆகியோரின் சகோதரரும், வசந்தகுமாரி (ஜேர்மனி), வரதானந்தன் (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கரவச்சை, அளவெட்டி.** **தகவல்: குடும்பத்தினர்.**

(CS 24212) A-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.